**கிரிபாவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 20 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஜுலை 14 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 17 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிரிபாவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அலுவலகம் அமைந்துள்ள காணி உள்ளிட்ட 30 பொதுக் காணிகள் மற்றும் 14 மயானங்கள் என 48 காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31ஆம் திகதியன்று 05 உத்தியோகததர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் ரூபா. 580,520 தொகை நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டிருந்தது. | சரியான பெறுமதியை கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டுடன் தொடர்பான கணக்காய்வுக் கட்டணத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2019 திசெம்பர் மாதத்தில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா. 2,366,148 சம்பளம மீள் நிரப் பப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்படல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துகளின் கீழ் ரூபா. 305,764 பெறுமதியான விளக்கமற்ற கணக்குப் பரிமாற்ற மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் 16 விடயங்களுடன் தொடர்பாக நிதிக்கூற்று மீதிகளுக்கும் சம்பந்தப்பட்ட ஆவணங்கள்/ அட்டவணை மீதிகளுக்குமிடையே ரூபா. 5,764,313 வேறுபாடு காணப்பட்டது. | குறித்த மீதிகளின் வேறுபாடுகள் ஒப்பீடு செய்யப்பட்டு கணக்குகளை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீர் செய்வேன். |
| (எ) | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமை காரணமாக ரூபா. 12,478,366 கூட்டுத்தொகையான 06 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்யப்பட முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்கு மீதிகளை உறுதி செய்வதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் சரியான ஆவணங்களை சமர்ப்பிப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,168,824 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 326,824 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | வீதவரியும் வரியும் | 515,000 | 589,800 | 589800 | - | 415,000 | 457,260 | 457,260 | - |
| (ii) | வாடகை | 3,248,000 | 3,066,360 | 3,106,510 | 151,316 | 2,710,400 | 3,049,865 | 3,049,865 | 220,603 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 420,000 | 408,275 | 408,275 | - | 415,000 | 397,150 | 397,150 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 39,041,322 | 4,014,435 | 8,138,460 | 234,560 | 37,390,004 | 33306111 | 7,244,780 | 4,358,586 |
| | மொத்தம் | 43,224,322 | 8,078,870 | 12,243,045 | 385,876 | 40,930,404 | 37,210,386 | 11,149,055 | 4,579,189 |

## 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஒரு அசையாத சொத்தின் அல்லது வேறொரு சொத்தின் வருடாந்த பெறுமதியின் அடிப்படையிலான வீதவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செய்யப்பட்ட நகரப் பிரதேசம் இனங்காணப்பட்டு வீதவரி வலயமாகப் பிரகடனப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் வீதவரி வலயங்களை உருவாக்குதல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெரகும்புரவிலுள்ள 05 கடைகளுக்காக ரூபா. 1,650 மதிப்பிடப்பட்ட வாடகை கடை உரிமையாளர்களின் எதிர்ப்பின் காரணமாக மீண்டும் ரூபா. 1,250 ஆக மதிப்பிடப்பட்டிருந்தது. எனினும் 2019 மார்ச் 19 ஆம் திகதி நடாத்தப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது ஒரு கடை ரூபா. 4,000 மாதாந்த வாடகைக்கு வேறொருவருக்கு வழங்கப்பட்டிருந்த போதும் சபைக்கு வாடகைத் தொகையை அதிகரிக்க முடியாது போயிருந்தது. | ஒப்பந்த நிபந்தனைகளை மீறியமைக்கு எதிராக ஒப்பந்த அடிப்படையில் செயற்படல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) பாதீடு செய்யப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா. 16,700,000 பெறுமதியான 14 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பாதீடு செய்யப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |

**(ஆ) நிதி கிடைக்கப்பெறாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்படாத 09 திட்டங்களுக்காக ரூபா. 363,647 செலவிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரமாணங்களுக் கேற்ப செயற்படல் வேண்டம். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த 05 ஏக்கர் பரப்புள்ள காணியை அபிவிருத்தி செய்வதற்காக 2015 மற்றும் 2016 வருடங்களில் ரூபா. 500,000 செலவிடப்பட்டிருந்த போதும் கழிவு திண்மக் முகாமைத்துவ நடவடிக்கைகள் | திண்மக் முகாமைத்துவ நடவடிக்கை களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடு களை ஏற்றுக்கொள்கிறேன். 2020 ஆம் ஆண்டில் உக்கலடையாத கழிவுகளை |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் பிரதேச வாசிகள் உக்கலடையாத கழிவுகளை அகற்றுவதற்கான வழிமுறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான ஒரு கட்டிடத்தை அமைத்து கழிவுகளை சேகரித்து வைப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு உட்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 604,111 உம் மூன்று வருடங்களைத் தாண்டிய ரூபா. 101,500 உம் 2020 ஜுலை 10 ஆம் திகதி வரை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) 2019 டிசம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு உட்பட்ட காலமாக செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா. 788,282 2020 ஜுலை 10 ஆம் திகதி வரை செலுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை, ஆரம்ப நிலை மற்றும் அமைய/ஒப்பந்த பதவிகள் சார்ந்த 15 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா. 1,200,000 பெறுமதியான டபல் கெப் வாகனம், 25 மயானங்கள் மற்றும் 12 காணிகளை சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | துண்டுக் கல் திட்டத்துடன் தொடர்பான ரூபா. 590,401 செலவிடப்பட்ட கட்டிடங்கள் மற்றும் ரூபா. 260,000 பெறுமதியான துண்டுக் கல் உற்பத்தி இயந்திரங்கள் 02 ஆகியன 2015 ஆம் ஆண்டிலிருந்து பயனற்றுக் காணப்படுகையில் 2019 ஆகஸ்ட் மாதம் பிங்கிரிய பிரதேச சபையின் மூலம் நன்கொடையாக மேலும் 02 துண்டுக் கல் உற்பத்தி இயந்திரங்கள் கிடைக்கப்பெற்றிருந்தன. | துண்டுக் கல் திட்டத்தினை செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான காபேஜ் டேலர் பயன்பாடற்றுக் காணப்பட்டது. | கழிவு சேகரித்தல் நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். |
| (இ) | சபைக்குச் சொந்தமான ரூபா. 608,000 பெறுமதியான ஒரு ரெக்டர் வண்டி மற்றும் ரூபா. 336,300 பெறுமதியான இரும்பு நீர் பவுஸர் 05 வருடங்களுக்கும் கூடுதலாக செயற்பாடற்றுக் காணப்பட்டன. | இயந்திரப் பொறியியலாளரின் அறிவுறுத்தலுக்கமைய திருத்தம் செய்வதற்கு அல்லது ஒதுக்குவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இயந்திரப் பொறியியலாளரின் அறிவுறுத்தலுக்கமைய செயற்படுவேன். |